**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமலல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியிலுள்ள (அ) அவதானிப்பு நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மூலதன வேலைகள், அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட கணினிகள் மற்றும் புத்தகங்களின் பெறுமதி ரூபா 4,669,458 மூலதனவாக்கம் செய்யப்பட்டிருக்காமையினால் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்து மற்றும் மூலதன அரைசிறை உதவு தொகை என்பன குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | அனைத்தும் தவறுதலாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தாது விடப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக உரிய காலப்பகுதிகளில் வெளிப்படுத்தல் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன் குறித்த பெறுமதிகளினை நிலையான சொத்தாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபையினால் ரூபா 6,290,000 பெறுமதியான 08 வேலைத்திட்டத்திற்கான பொருட்களின் கொள்வனவுகள் மற்றும் ரூபா 18,190,829 பெறுமதியான 20 வேலைத் திட்டங்களானது நிறை வேற்றப்படாத போதிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் உள்ளடக்கப் பட்டிருந்தமையினால் செலவினங்கள் மற்றும் நடப்பு பொறுப்புக்கள் ரூபா 24,480,829 நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சபைக்கான வருமானங்கள் வருட இறுதி வரை கிடைப்பதனால் பொருட்கொள்வனவுகள், சபையின் அபிவிருத்தி வேலைகள் வருட இறுதியில் ஆரம்பிக்கப்படுகின்றது. அதனால் குறித்த ஆண்டும் சில்லறை கடன் கொடுநர் கணக்கில் உள்ளடக்கப்பட வேண்டிய தேவை ஏற்படுவதனால் இக் கணக்கீட்டு முறை பின்பற்றப்படுகின்றது. | வேலைகள் நிறைவு பெற்ற பின்பே பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேசசபை கட்டளைச்சட்டத்தின் பிரிவு 126 இன் சரத்து XXX இற்கமைவாக சபையின் எல்லைக்குள் பொருத்தப்பட்ட விளம்பர பலகைகளிற்கு வழங்கப்படும் உரிமங்களிற்கு கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தும் மானிப்பாய் பட்டின உப அலுவலக எல்லைக்குள் நிர்மாணிக்கப் பட்டிருந்த விளம்பரப் பலகைகளிற்கு கட்டணம் அறவிடப்படாமையால் மீளாய்வாண்டில் ரூபா 87,650 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. | மானிப்பாய் பட்டின உப அலுவலக எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்டிருந்த விளம்பரப்பலகைகளுக்கான கட்டண அறவீடு தொடர்பில் பல முறை கடித மூலம் அறிவுறுத்தல் வழஙகப்பட்டிருந்தது. | வருமான சேகரிப்பு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக்குவதுடன் நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான 05 காணிகளின் பெறுமதிகள், 14 வாகனங்களின் பெறுமதிகள், 02 எண்ணிக்கையான நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் 456 எண்ணிக்கையான நூலகப்புத்தகங்கள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காமையால் நடை முறையல்லாச் சொத்து மற்றும் மூலதன அரசிறை உதவுதொகை என்பன குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான காணிகள் ஆவணங்கள் இல்லாது இருப்பதனாலும் வாகனங்களின் பொறுமதிகள் மதிப்பீடு செய்யப்படாது இருப்பதனாலும் சொத்தாக காட்டப்படாது உள்ளது.<br>நீர் இறைக்கும் இயந்திரங்களின் பெறுமதி தவறுதலாக நிலையான சொத்துக்களாக காட்டப்படவில்லை. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக உரிய காலப்பகுதிகளில் வெளிப்படுத்தல் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிலையான சொத்தாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |

## 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | அபிவிருத்தி ஒதுக்கம் | 25,801,558 | மூலதன அபிவிருத்தி வேலைகள் தொடர்பான விபரங்கள் | 2021 ஆண்டுக்கான அபிவிருத்தி ஒதுக்கம் 37.2 மில்லியன் ரூபாயிலிருந்து கணனிக்கொள்வனவு ரூ. 2,383,500 செலவு மேற்கொள்ளப்பட்டது. மிகுதி தொகைக்குரிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்க்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆதனவரி ஆரம்ப நிலுவை | 25,498,555 | குறித்த பெறுமதி எந்த ஆண்டுகளுக்குரியது என்பது | எதிர்வரும் காலங்களில் ஆதனவரி நிலுவைகளுக்கான வயதுப்பகுப்பாய்வு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | குறித்த பெறுமதி எந்த ஆண்டுகளுக்குரியது என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 54,400,837 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 42,348,978 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| | மீளாய்வாண்டில் வீதவரியின் பட்டியல் படுத்தப்பட்ட வருமானம் ரூபா 7,818,832 ஆகக் காணப்பட்ட போதும் ரூபா 5,517,100 சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளை சட்டத்தின் 134 (i) இற்கமைவாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களிலுள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பனவற்றின் மீது அறவிடப்பட வேண்டிய ரூபா 22,083,894 பெறுமதியான 02 வருடங்களிற்கு மேற்பட்ட ஆதனவரி நிலுவையினை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. | புலம்பெயர் ஆதன உரிமையாளர்கள் பயண மட்டுப்படுத்தல் காரணமாகவும் வீத வரியின் பட்டியல்படுத்தப்பட்ட வருமானம் முழுவதையும் அறவிடமுடியாமல் இருந்தது. உபஅலுவலகத்தினால் கூடிய நிலுவை தொகையுடைய ஆதன உரிமையாளருக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு மீளாய்வு ஆண்டில் ரூ. 4,943,129 நிலுவைத்தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது. | வருமான சேகரிப்பு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக்குவதுடன் நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் 02 வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 550,424 குத்தகை நிலுவை காணப்படுகின்றது. | காக்கைதீவு மீன்சந்தை குத்தகை தொகை செலுத்தாமை தொடர்பாக வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கியபின்னும் நிலுவை தொகை செலுத்தப்படாது உள்ளது. மீளவும் வழக்கு தொடர்ந்து நிலுவை தொகையினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குறித்த நிலுவை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைவுபடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையினால் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்படும் 11 எண்ணிக்கையான கடைகள் மற்றும் சபையின் 04 சந்தைகள் கடைகள் ஆகியன மீளாய்வாண்டு காலப்பகுதியில் கேள்விகோரி வழங்கப்பட்டிருக்காமையினால் ரூபா 1,365,484 சபைக்கு மீளாய்வாண்டில் வருமான இழப்பாக இருந்தது. | மானிப்பாய் சந்தை கட்டடத்தொகுதியின் மேற்தள கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு 2022.02.17 ஆம் திகதி கேள்வி கோரப்பட்டது. ஆனால் ஒருவரும் வாடகைக்கு எடுப்பதற்கு முன்வராத காரணத்தினால் இற்றை வரை வாடகைக்கு வழங்கப்படவில்லை. மீள கேள்விகோருவது தொடர்பில் சபைத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குறித்த 04 சந்தைகளும் கேள்வி கோரப்பட்டிருந்த போதும் அவரினால் கேள்விகோரப் பட்டிருக்கவில்லை. அதனால்ல மீள்கேள்வி கோரியும் வழங்கப்பட முடியாதிருந்தது. | சபையின் வருமான மூலங்களை வருமான நோக்கில் பூரணமாக பயன்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிலையான வைப்பில் உள்ள ரூபா 187,094,067 இனை பயன்படுத்தி அபிவிருத்தி வேலைகளினை நடைமுறைப்படுத்தாது வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டிருந்தது. | ரூபா 187,094,067 சபையின் நிலையானவைப்பு இருந்து 2022 ஏப்ரல் மாதம் வரையில் அபிவிருத்தி ஒதுக்கத்திற்குரிய தொகை ரூபா 25,315,104 இற்கு அபிவிருத்திவேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இனிவரும் மாதங்களிலும் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. | சபை நிதிகளினை விரையமின்றி உத்தமமட்டத்தில் அபிவிருத்தி செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபை நிதி மூலமான நிறைவேற்றப்பட்ட மாசியப்பிட்டி ஜனசக்தி வீதிக்கான தடுப்புச்சுவர் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி நெறி 2006 இன் 2.3.1 (அ) இற்கு முரணாக களஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தமை, குறித்த தடுப்புச் சுவர் இடிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப் பட்டிருந்தது. இதனால் இவ்வேலைக்கான கொடுப்பனவு ரூபா 74,782 பெறுமதியானது ஒரு பயன்பாடற்ற கொடுப்பனவாகவிருந்தது. | இச் தடுப்பசுவர் இடிக்கப்பட்டுள்ளமை தொடர்பான தொடர் நடவடிக்கை தொடர்பாக நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | அவசியமான விடயங்களை ஆராய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |